# முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**PW 2- OS. No. 219/2023**

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி முதன்மை சார்பு நீதிபதி திருமதி.V.ஸ்ரீவித்யா, எம்.எல்., முன்னிலையில் திருமதி.ஜெயலட்சுமி கிரேடு 2 பென்ச் கிளர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திரு.கோபால் | தொழில் : |
| த/பெ. : திரு | வயது : |
| முகவரி : | |

**வாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 3 ம் தரப்பினர். எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | | எனது ஆதார் அட்டை | நகல் | **Ex.X1** |
| 2 | | என்னிடம் காட்டப்படும் 12.4.2007 தேதியிட்ட ஆவணத்தின் பக்கம் 7 ல் உள்ள சாட்சிகள் என்ற இடத்தில் இருக்கும் முதல் கையெழுத்து என்னுடையது தான் | | **வா.சா.ஆ.18** |
| 3 | | அதே ஆவணத்தின் இரண்டாவது பக்கத்தில் என்னார் என்று நிரூபித்தவர் இடத்தில் காணப்படும் கையெழுத்து என்னுடையது தான் | | **வா.சா.ஆ.19** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு பிராது படி தீர்ப்பு அளிக்க வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

1. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் ஆவணையின் 5217/2007 12.4.2007 தேதியிட்ட ஆவணத்தின் சொத்து விவரங்களை சொல்லி இருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லி இருக்கு ஆவணத்தை படித்து பார்த்து தான் நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றாலும் ஆமாம் .நஞ்சப்ப நாடாரை எப்படி தெரியும் என்று கேட்டால் அவர் எனக்கு பக்கத்து வீடு அவர் முன்னாடி இருக்கிறேன் நான் பின்னாடி குடி இருக்கிறார் . தற்போது நஞ்சப்ப நாடார் இறந்து விட்டார். இப்போது அந்த வீட்டில் யாரெல்லாம் இருக்கிறார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது .எங்கள் ஊருக்கும் தாவா சொத்து இருக்கும் இடத்திற்கும் இரண்டு கிலோமீட்டர் தூரம் இருக்கும்.

2. நான் தற்போது மெய்யாண்டம் பாளையம் இருக்கும் எங்கள் வீட்டில் குடி இருக்கிறேன். நான் நஞ்சப்ப நாடாருக்கு பக்கத்து வீட்டில் குடி இருந்ததாக பொய் சாட்சி சொல்லி இருக்கிறேன் என்று சொன்னால் சரி அல்ல .நான் மெய்யாண்டபாளையத்தில் தான் குடியிருந்து வருகிறேன் என்றும் ஒரு நாளும் வாதியின் வீட்டிற்கு அருகில் நான் குடியிருக்க வில்லை என்று சொன்னால் சரியல்ல .வா.சா.ஆ.5 மற்றும் 8 ஆவணங்களை சாட்சி இடம் காட்டி எந்த ஆவணத்தை பதிவு அலுவலகத்தில் பார்த்தேன் என்று கேட்டபோது இவர் வா.சா.ஆ.5 யை காட்டுகிறார். வா.சா.ஆ.8

2007 ஆண்டு நகல் எடுத்த ஆவணம் என்றால் ஆமாம். அதில் என் கையெழுத்து உள்ளது.மேற்படி ஆவணத்தில் 3ம் பக்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம் அப்படித்தான் நான் பார்த்தேன் என்றாலும் ஆமாம் .

3. வா.சா.ஆ.5 ஆவணம் 26.7.2022 அன்று எடுத்த நகலின் படி 3ம் பக்கத்தில் வா.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள வாசகங்கள் அனைத்தும் அடிக்கப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். அது அடித்திருப்பதாகவும் எழுதப்பட்டிருக்கிறது.2007 ல் ஒரு நகல் கொடுத்திருகிறது மேலும் 2022 இல் ஒரு ஆவண நகல் கொடுக்கப்பட்டிருக்கிறது இதில் எந்த ஆவணத்தை நான் பார்த்தேன் என்று கேட்டால் 2007 ல் கொடுத்ததை தான் பார்த்தேன். 2007 ஆம் வருடம் கொடுத்த ஆவணத்தில் நகலில் எந்த ஒரு அடித்தல் திருத்தலும் இல்லை என்றும் நான் பொய்யான ஒரு ஆவணத்திற்காக பொய் சாட்சி சொல்ல வந்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல .

4. நஞ்சப்ப நாடார் கையெழுத்து செய்யும்போது நான் பார்த்தேன் .அவருக்கு என்ன வயது என்றெல்லாம் எனக்கு தெரியாது. வாதி சின்னசாமி நஞ்சப்ப நாடாரின் மகன் ஆவர். நஞ்சப்ப நாடார் மூலமாக சின்னசாமியை தெரியுமா அல்லது சின்னசாமி மூலம் நஞ்சப்ப நாடார் தெரியுமா என்று கேட்டால் இருவரையும் தெரியும் .நஞ்சப்ப நாடார் வயதானவர் என்ற விவரம் எனக்கு தெரிந்திருக்க வாய்ப்பிருக்கிறது என்றால் அவர் வயதானவர் தான். நஞ்சப்ப நாடாருக்கு ஆவணம் எழுதும்போது வயது 85 என்று சொன்னால் எனக்கு வயது தெரியாது ஆனால் இருக்கலாம். நஞ்சப்ப நாடார் சின்னசாமியின் மீது வேறொரு வழக்கு தொடர்ந்திருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. இந்த வழக்கு வாதி சின்னசாமி எதற்காக தாக்கம் செய்திருக்கிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரமாண பத்திரிக்கையில் எனக்கு அனைத்த விவரங்களும் தெரியும் என்று சொல்லிவிட்டு தற்போது தெரியாது என்று பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல .

6. எனக்கு நஞ்சப்ப நாடார் யார் என்று தெரியாது என்றும் அவர் என் முன் கையெழுத்தை செய்யவில்லை என்றும் நான் இந்த வழக்கில் சின்னசாமி சாதகமாக பொய் சாட்சி சொல்வதற்காக வந்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல .இந்த ஆவணத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்ற போதிலும் நான் அனைத்து விவரங்களும் தெரிந்தால் போல் நீதிமன்றத்தில் சாட்சியளிப்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே ஆவணத்தை நான் படித்து பார்த்திருந்தால் முன்னுக்குப் பின் முரணாக நான் சாட்சியும் அளித்திருக்க மாட்டேன் என்று சொன்னாலும் சரி அல்ல .

7. தான செட்டில்மெண்ட் ஒரு பொய்யான ஆவணம் என்றும் அதற்கு ஆதரவாக வாதி சின்னசாமி கேட்டுக் கொண்டதற்காக அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V SREE VIDYA

Digitally signed by V SREE VIDYA
DN: cn=V SREE VIDYA, ou=JUDICIAL JUDGE , o=THE PRINCIPAL SUBORDINATE COURT , l=TIRUPPUR, st=TAMIL NADU, c=91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.